# குதிரைகள் எத்தனை?

சுந்தரம் ஒரு விவசாயி. தனது பண்ணையில் பல மிருகங்களை வளர்த்து வந்தான். ஒருநாள் கமால் சுந்தரத்தின் பண்ணைக்குச் சென்றான். இருவரும் உரையாடினர்.



கமால் : உங்களுடைய பண்ணையை அழகாக வைத்து இருக்கின்றீர்கள். என்னென்ன மிருகங்களை வளர்க்கின்றீர்கள்.

சுந்தரம்: குதிரைகள், மாடுகள். ஆடுகள்.

கமால் : அப்படியா? எத்தனை குதிரைகள் வைத்திருக் கிறீர்கள்?

சுந்தரம்: இரண்டு மிருகங்களைத் தவிர எல்லாமே குதிரைகள்.

கமால் : குதிரைகள் எத்தனை என்று கூற விரும்பாவிட்டால் எத்தனை மாடுகள் என்றாவது கூறுங்கள்.

சுந்தரம் : மாடுகளா? அவையும் அப்படித்தான். இரண்டு மிருகங்களைத் தவிர எல்லாமே மாடுகள் தான்.

கமால் : மாட்டையும் எத்தனை என்று சொல்ல மறுக்கின்றீர்கள். ஆடுகள் எத்தனை என்றாவது கூறுவீர்களா?

சுந்தரம்: அதுவும் அப்படித்தான். இரண்டு மிருகங்களைத் தவிர எல்லாமே ஆடுகள் தான்.

கமால் : நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? எனக்குத் தலை சுற்றுகின்றது. பிள்ளைகளே! நீங்களாவது எனக்கு உதவி செய்ய மாட்டீர்களா?

சுந்தரத்தின் பண்ணையில் எத்தனை குதிரைகள்? எத்தனை மாடுகள்? எத்தனை ஆடுகள்?



குறிப்பு: ★ மாணவர்களிடம் வயதுக்கேற்ற விடுகதைகளைக் கேட்டு விடுவிக்க செய்யுங்கள்.